31..7.2019.
அசல் வழக்கு எண். 385-2010

பிவா.சா.1 செல்லம் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

4.10.1950ல் எனது தகப்பனாரும் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியும் வாதியின் தகப்பனாருக்கு தாவா சொத்தை பொறுத்து கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் செய்யப்பட்ட விபரம் செய்திதாளில் அறிவிப்பு வெளியிடப்பட்ட போது தெரிய வந்தது எந்த வரும் செய்தி தாளில் அறிவிப்பு வெளியிடப்பட்டது என்று தெரியவில்லை. என் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் 1950 தேதியிட்ட கிரைய பத்திரத்தை எழுதி கொடுக்கவில்லை. என் எதிர் வழக்குரையில் 4.10.1950ம் தேதியிட்ட கிரையபத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை சாட்சி பின்னர் ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். வாதியின் தகப்பனார் பெயருக்கு எப்போது தாவா சொத்துக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. வாதி இந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று நினைவில்லை. வாதியின் தகப்பனார் பெயரில் 1971ம் ஆண்டு தாவா சொத்துக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல பொய்யானது. தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா இல்லை செல்லம் பெயரில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. சாலை என்பவரை எனக்குத் தெரியாது. சாலை என்பவருக்கு வாதியின் தகப்பனார் 13 செண்டை பொறுத்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. தாவா வழக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. சாலை 13 செண்டை கிரையம் பெற்ற பின் சர்வே நம்பர் உட்பிரிவு செய்யப்பட்டது தெரியாது. சாலை பெயரில் பெற்ற கிரையத்திற்கு ச.எண்.188-7எ என்றும் வாதியின் சொத்துக்கு 188-7 என்றும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.. சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதிர் கோரிக்கை செய்துள்ளேனா என்றால்

செய்துள்ளேன். 4.10.1950 தேதிய கிரைய ஆவணத்தை பொறுத்தும் வாதியின் தகப்பனார் சாலைக்கு எழுதிகொடுத்த 16.7.2001 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பொறுத்தும் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் பரிகாரம் கோரியுள்ளேன். நான் பிறந்த வருடம் எனக்கு நினைவில்லை. என் தகப்பனார் என்னை மைனராக காண்பித்து 4.10.1950 தேதியிட்ட கிரைய பத்திரத்தை எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சாலை கிரையம் பெற்ற சொத்தை அவரது குடும்பத்தினர் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. சாலையின் மகன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)